## 10.6 உயர்நிலைக் குழு பரிந்துரை – பேரூராட்சித்துறையில் நிர்வாக அனுமதி/ தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி ஆணை வெளியிடப்படுகின்றன.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ 2) துறை

அரசாணை (ப) எண். 166 நாள்.12.04.2008

படிக்க:

1. அரசாணை (ப) எண். 147, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 9.6.97
2. அரசாணை (ப) எண். 309, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 02.06.2000
3. அரசாணை (ப) எண்.6, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 22.1.2007

**ஆணை :**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பான தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கான அதிகார வரம்பை பின்வருமாறு உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

| வ. எண். | பதவி நிலை | தற்போதுள்ள வரம்பு | உயர்த்தப்படும் வரம்பு |
|---|---|---|---|
| 1. | நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக கண்காணிப்புப் பொறியாளர் | பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரின் அதிகார வரம்பு | மாற்றும் ஏதும் இல்லை |
| 2. | மாநகராட்சிகளில் நகரப் பொறியாளர் | ரூ. 25 லட்சம் | ரூ. 50 லட்சம் (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) |
| 3. | மண்டல செயற் பொறியாளர் நகராட்சிப் பொறியாளர் நிலை 1/செயற் பொறியாளர் | ரூ. 10 லட்சம் | ரூ. 30 லட்சம் (ரூபாய் முப்பது லட்சம் மட்டும்) |
| 4. | நகராட்சிப் பொறியாளர் | ரூ. 5 லட்சம் நிலை 2 உதவி செயற் பொறியாளர் | ரூ. 15 லட்சம் (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) |
| 5. | நகராட்சிப் பொறியாளர் | ரூ. 1 லட்சம் நிலை 3 | ரூ. 5 லட்சம் (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) |

2. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பேரூராட்சி மன்றம், உதவி இயக்குநர். மாவட்ட ஆட்சியர். பேரூராட்சிகளின், இயக்குநர் ஆகியோர்களுக்கு நிர்வாக ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரத்திற்கான வரம்பை பின்வருமாறு உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டன.

ரூபாய் (இலட்சத்தில்)

| நிலை | பேரூராட்சி மன்றம் | உதவி இயக்குநர் | மாவட்ட ஆட்சியர் | பேரூராட்சிகளின் இயக்குநர் | அரசு |
|---|---|---|---|---|---|
| சிறப்பு நிலை தேர்வு நிலை | 2.00 | 5.00 | 10.00 | 100.00 | 100.00 க்கு மேல் |
| நிலை I மற்றும் நிலை II | 1.00 | 5.00 | 10.00 | 100.00 | 100.00 க்கு மேல் |

3. பேரூராட்சிகளின் திட்டப் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்குவதற்கான வரம்புகள் 7 மற்றும் 10 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டவையாதலால் தற்போதைய தேவைக்கு தகுந்தவாறும் மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்திற்கேற்றவாறும், கீழ்க்கண்டவாறு பேரூராட்சிகளின் நிர்வாக மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை திருத்தியமைக்க கோரி பேரூராட்சிகளின் இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

**நிர்வாக அனுமதி வழங்க அதிகார வரம்பு** (ரூபாய் (இலட்சத்தில்)

| நிலை | பேரூராட்சி மன்றம் | உதவி இயக்குநர் | மாவட்ட ஆட்சியர் | பேரூராட்சிகளின் இயக்குநர் | அரசு |
|---|---|---|---|---|---|
| சிறப்பு நிலை தேர்வு நிலை | 5.00 | 15.00 | 30.00 | 500.00 | 500.00 க்கு மேல் |
| நிலை I மற்றும் நிலை II | 3.00 | 15.00 | 30.00 | 500.00 | 500.00 க்கு மேல் |

**தொழில் நுட்ப அனுமதி வழங்க அதிகார வரம்பு** ரூபாய் (இலட்சத்தில்)

| வ. எண். | தொழில் நுட்ப அதிகாரிகள் | உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை |
|---|---|---|
| 1. | கண்காணிப்புப் பொறியாளர் / பேரூராட்சிகளின் இயக்கம் | 75.00 க்கு மேல் |
| 2. | மண்டல செயற்பொறியாளர் / நிலை I/ செயற்பொறியாளர் | 75.00 |
| 3. | பேரூராட்சி பொறியாளர் / உதவி செயற் பொறியாளர் | 30.00 |
| 4. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 10.00 |

4. மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர் மற்றும் அரசு துறைகளின் அதிகாரிகள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோரைக் கொண்டு அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு நிர்வாக அனுமதி வழங்க உச்ச வரம்பு மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்க அதிகார உச்ச வரம்பு ஆகியவற்றை பின்வருமாறு உயர்த்த பரிந்துரைத்தது.

**I. நிர்வாக அனுமதி வழங்க அதிகார வரம்பு** ரூபாய் (இலட்சத்தில்)

| | சிறப்பு நிலை தேர்வு நிலை | | நிலை I மற்றும் நிலை II | |
|---|---|---|---|---|
| | தற்போது உள்ளது | பரிந்துரைக்கப் பட்டுள்ளது | தற்போது உள்ளது | பரிந்துரைக்கப் பட்டுள்ளது |
| பேரூராட்சி மன்றம் | 2.00 | 8.00 | 1.00 | 4.00 |
| உதவி இயக்குநர் | 5.00 | 20.00 | 5.00 | 20.00 |
| மாவட்ட ஆட்சியர் | 10.00 | 30.00 | 10.00 | 30.00 |
| பேரூராட்சிகளின் இயக்குநர் | 100.00 | 300.00 | 100.00 | 300.00 |
| அரசு | 100.00க்கு மேல் | 300.00க்கு மேல் | 100.00க்கு மேல் | 300.00க்கு மேல் |

**தொழில் நுட்ப அனுமதி வழங்க அதிகார உச்ச வரம்பு** ரூபாய் (இலட்சத்தில்)

| வ. எண். | தொழில் நுட்ப அதிகாரிகள் | தற்போதுள்ள தொகை | உயர்நிலைக்குழு பரிந்துரைத்தது |
|---|---|---|---|
| 1. | செயற்பொறியாளர் | 30.00 | 40.00 |
| 2. | உதவி செயற் பொறியாளர் | 15.00 | 30.00 |
| 3. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 5.00 | 20.00 |

5. மேற்குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமுடன் ஆய்வு செய்து நிர்வாக அனுமதி தொடர்பான கீழ்க்கண்ட பரிந்துரைகளை ஏற்று அவ்வாறே ஆணையிடுகிறது.

**நிர்வாக அனுமதி :** ரூபாய் (இலட்சத்தில்)

| | சிறப்பு நிலை தேர்வு நிலை | | நிலை I மற்றும் நிலை II | |
|---|---|---|---|---|
| | தற்போது உள்ளது | பரிந்துரைக்கப் பட்டுள்ளது | தற்போது உள்ளது | பரிந்துரைக்கப் பட்டுள்ளது |
| பேரூராட்சி மன்றம் | 2.00 | 8.00 | 1.00 | 4.00 |
| உதவி இயக்குநர் | 5.00 | 20.00 | 5.00 | 20.00 |
| மாவட்ட ஆட்சியர் | 10.00 | 30.00 | 10.00 | 30.00 |
| பேரூராட்சிகளின் இயக்குநர் | 100.00 | 300.00 | 100.00 | 300.00 |
| அரசு | 100.00க்கு மேல் | 300.00க்கு மேல் | 100.00க்கு மேல் | 300.00க்கு மேல் |

**6.** தொழில்நுட்ப அனுமதி தொடர்பாக உயர்நிலைக்குழு செய்த பரிந்துரைகளை கீழ்க்கண்ட மாற்றங்களுடன் அரசு ஏற்று அவ்வாறே ஆணையிடுகிறது.

**தொழில்நுட்ப அனுமதி** ரூபாய் (இலட்சத்தில்)

| வ. எண். | தொழில் நுட்ப அதிகாரிகள் | தற்போதுள்ள தொகை | உயர்நிலைக்குழு பரிந்துரைத்தது | மாற்றத்துடன் ஏற்கப்பட்டது |
|---|---|---|---|---|
| 1. | செயற்பொறியாளர் | 30.00 | 40.00 | 40.00 |
| 2. | உதவி செயற் பொறியாளர் | 15.00 | 30.00 | 20.00 |
| 3. | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 5.00 | 20.00 | 5.00 |

**7.** இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண். 621/நிதித்துறை (பி)/08 நாள். 19.3.2008—ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து,**
அரசு செயலர்.